## மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டம்

# பூந்தமல்லியில் பணிமனை அமைகிறது

சென்னை,ஜன.17: இரண்டாம்கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி வழித்தடத்தில் இயக்கப்படும் ரயில்களை நிறுத்துவதற்கும், பராமரிப்பதற்கும் பூந்தமல்லியில் பணிமனை அமைக்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

சென்னையில், 118.9 கி.மீ. தொலைவிலான இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் அறிவிக்கப்பட்டது. மாதவரம்-சிப்காட் (45.8 கி.மீ.), மாதவரம்-சோழிங்கநல்லூர் (47.0), கலங்கரை விளக்கம்-பூந்தமல்லி (26.1 கி.மீ.) ஆகிய வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு ரூ.61,843 கோடியாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**பூந்தமல்லியில் பெரிய பணிமனை:** மாதவரம்- சோழிங்கநல்லூர் இடையே தொடங்க இருந்த மெட்ரோ ரயில் திட்டம் மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக பூந்தமல்லி - பவர் ஹவுஸ் (கோடம்பாக்கம்) உயர்த்தப்பட்ட பாதையில் திட்டப்பணிகளை முதலில் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், மெட்ரோ ரயில்களைப் பராமரிக்க, பூந்தமல்லியில் பெரிய பணிமனை அமைக்க திட்டமிட்டுள்ளது.

பூந்தமல்லி மெட்ரோ ரயில் நிலையத்துடன் பணிமனையை இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மூன்று முதல் நான்கு மாதங்களுக்குள் பணிமனை அமைப்பதற்கான ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் என்று மெட்ரோ ரயில் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

**ரூ.225 கோடி தேவை:** விரிவான திட்ட அறிக்கையில், இந்த பணிமனைக்கு 17.4 ஹெக்டேர் நிலம் தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.225 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர, மற்றொரு பணிமனையை மாதவரத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது 27.8 ஹெக்டேர் நிலத்தில் கட்டப்படும்.

மாதவரம் மற்றும் பூந்தமல்லி பணிமனைகள் மற்றும் பிற வசதிகளுக்காக, சுமார் 40 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.